பக்கங்கள் ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

மலர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஆவணி 12 சனிக்கிழமை (28-08-1993) UTHAYAN—A Lively National Tamil Daily கதிர் 273

## வான், தரை, கடல்வழித் தாக்குதல்களுடன் இருமுனைகளில்

# மாதகலில் முன்னேற முயன்ற படை

# விடுதலைப்புலிகளால் விரட்டியடிப்பு

## நேற்றுப் பகல் உக்கிரச் சண்டை

## 2 டாங்கிகளும், கவசவாகனமும் சேதம்

யாழ்ப்பாணம், ஆகஸ்ட் 28

வான், தரை, கடல் வழித் தாக்குதல்களுடன் மாதகலிலிருந்து இரு முனைகளில் நேற்று சுமார் ஒரு கிலோ மீற்றர் தூரம் வரை முன்னேறிய ஸ்ரீலங்காப் படையினரை விடுதலைப் புலிகள் விரட்டியடித்தனர். அப்பகுதியில் நேற்றுப்பகல் முழுவதும் உக்கிரச் சண்டை நடைபெற்றது.

புலிகளின் ஆர். பி. ஜி. தாக்குதலில் படையினரின் இரு டாங்கிகளும், ஒரு பவள் கவசவாகனமும் பலத்த சேதமடைந்தன.

நேற்றுக் காலை 8.45 மணி அளவில் புக்காரா, சியாமாச்செட்டி பொம்மர் களின் அகோரக் குண்டு வீச்சு— முகாம்களிலிருந்து உக்கிர ஷெல் தாக்குதல் — மாதகல் கடற் பிராந்தியத் தில் தரித்து நின்ற பீரங்கிப் படகுகளிலிருந்து விடாது பீரங்கித் தாக்குதல் — ஆகியவற்றை நடத்திய வாறு கவச வாகனங்கள், டாங்கிகள் ஆகியவற்றுடன் மாதகலில் இருந்து படையி

(6 ஆம் பக்கம் பார்க்க)

## பொம்மர் தாக்கு, ஷெல் வீச்சினால்

# பொது மக்கள் ஐவர் பலி; பலர் காயம்

### ஏராளமான உடைமைகளும் நாசம்

யாழ்ப்பாணம், ஆக. 28

அளவெட்டி மேற்கு மாதகல் பகுதியில் நேற்று முன்னேற முயன்ற படையினர் நடத்திய விமானக் குண்டு வீச்சு, பீரங் கித் தாக்குதல் மற்றும் கடும் ஷெல் தாக்குதல்களி னால் கணவன், மனைவி உட் பட ஐந்து பொதுமக்கள் உயி ரிழந்தனர்; பத்துப் பேர் வரை காயமடைந்தனர்; ஏராள மான வீடுகள் மற்றும் உடை மைகள் நாசமாகின.

விமானப் படையினரின் இரண்டு சியாமாச்செட்டி பொம்மர்கள், இரண்டு புக் காரா விமானங்கள் மற்றும் ஹெலிகள் வான் தாக்குதலை நடத்தின.

சுழிபுரம் காளுவன் சந்திக்கு அருகில் பெரியபுலவு மற்றும் நெல்லியான், மழுவைப்பகுதி களில் நேற்றுக் காலை 9 மணி யளவில் இடம்பெற்ற புக்கா ரத் தாக்குதலில் இருவர் உடல்

(2 ஆம் பக்கம் பார்க்க)

## உயிரிழந்த ஐவர்

யாழ்ப்பாணம், ஆக. 28

வலி. மேற்கில் இடம்பெற்ற விமானக் குண்டு வீச்சில் உயி ரிழந்த ஐந்து பேரின் விவர மும் வருமாறு:-

★ சுழிபுரம் காளுவன் சந் திக்கு அண்மையில் குடியிருப் புகள் மீது "புக்காரா" விமா னம் நடத்திய றொக்கட் தாக்குதலில் சிற்றம்பலம் இராமச்சந்திரன் (வயது 55 —சுழிபுரம் வாசி), காரைநக ரிலிருந்து இடம்பெயர்ந்து வந்தவரான அருணம்பலம் (வயது 60) ஆகிய இருவரும் உயிரிழந்தனர்

★ சித்தன்கேணியில் இடம் பெற்ற பொம்மர் தாக்குதலில் அச்சக உரிமையாளரான சுப் பிரமணியம் சர்வகுலராசா (வயது 51) அந்த இடத்தி லேயே உடல் சிதறிப் பலியா னார்.

★ அவரின் மனைவி ச. சகுந் தலாதேவி (வயது 45) ஆபத்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## காயமுற்றோர் விவரம்

யாழ்ப்பாணம், ஆக. 28

வலி.மேற்கில் இடம் பெற்ற ஸ்ரீலங்கா இராணுவத் தாக் குதலில் காயமுற்றுயாழ் ஆஸ் பத்திரியில் சேர்க்கப்பட்டோர் விவரம் வருமாறு:-

★ வேலுப்பிள்ளை கிருஷ்ண வேணி (வயது 23 — சுழிபுரம் மேற்கு)

★ மார்க்கண்டு கிருபாகரன் (வயது 25 — அளவெட்டியில் இருந்து இடம் பெயர்ந்து சுழி புரத்தில் வசிப்பவர்.)

(6 ஆம் பக்கம் பார்க்க)

## மக்கள் இடம்பெயர்வு

யாழ்ப்பாணம், ஆக. 28

வலிகாமம் மேற்கில் நேற்று இடம்பெற்ற இராணுவ நட வடிக்கைகளினால் ஆயிரக் கணக்கானோர் இடம்பெயர்ந் தனர்.

மூளாய், தொல்புரம், சுழி புரம், நெல்லியான், காட்டுப் புலம், பறாளை, சில்லாலை, பண் ணாகம், பனிப்புலம், பண் டத்தரிப்பு, வடலியடைப்பு, சித்தன்கேணி, சங்கானை மேற்கு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த குடும்பங்களே மூடை முடிச்சுகளுடன் நேற்றுக் காலை வேளை அவசர அவ

(... பார்க்க)

## 12 மணி நேரம்

## நேற்று ஊரடங்கு

யாழ்ப்பாணம் மற்றும் கிளி நொச்சி மாவட்டங்களில் நேற்றுக் காலை 6 மணி முதல் மறு அறிவித்தல் வரை ஊர டங்கு அமுலுக்குக் கொண்டு வரப்பட்டதாக நேற்றுக் காலை 8 மணிக்கு இலங்கை வானொலியின் சர்வதேச சேவையில் அறிவிக்கப்பட்டது.

பின்னர், நேற்று மாலை 6 மணியுடன் ஊரடங்குச் சட் டம் நீக்கப்பட்டதாக நேற்று மாலை 6 மணிக்கு இலங்கை வானொலி அறிவித்தது.

## 3 புலிகள் வீரச்சாவு

யாழ்ப்பாணம், ஆக. 28

மாதகலில் நேற்று முன்னேற முயன்ற படையினருடன் நடந்த மோதலில் விடுதலைப் புலிகள் போராளிகள் மூவர் வீரமரணமடைந்தனர்.

லெப்டினன்ட் அல்பேர்ட் (வேலாயுதம் ஸ்ரீரங்கன்— சில்லாலை), இரண்டாம் லெப் டினன்ட் உத்தமன் (இரத்தின சிங்கம் அறிவழகன்—ஏழாலை மேற்கு), வீரவேங்கை பொழி லயன் (நாகராசா கணேஸ் வரன்—கிளிநொச்சி) ஆகிய போராளிகளே வீரமரண மடைந்தனர்.

## பறாளாய் முருகன் உட்பட

## இரு கோயில்கள் சேதம்

யாழ்ப்பாணம், ஆக. 28

வலி. மேற்கு பகுதியில் நேற்று இடம்பெற்ற இரா ணுவ நடவடிக்கையின் போது இரண்டு ஆலயங்கள் சேத மடைந்தன.

மாதகலில் இருந்து வந்த ஷெல்கள் பறாளாய் முருக மூர்த்தி கோயிலின் தேர் கொட்டகை மீது விழுந்து வெடித்ததால், தேரும், தேர் முட்டியும், கொட்டகையும் சேதமடைந்தன.

இதேவேளை கோவிலை நோக்கி புக்காரா விமானத் தில் இருந்து மேற்கொள்ளப் பட்ட றொக்கட் தாக்குதலி னால் கோயில் வசந்த மண்ட பம், முன் மண்டபம், ஆலய பரிபாலன சபைக் காரியால யம், கோயில் பூசகரின் வீடு, மடப்பள்ளி ஆகியன பலத்த சேதமடைந்தன.

(2 ஆம் பக்கம் பார்க்க)

## இளாலிக் கடலில் நேற்றும்

## படையினர் மீது தாக்குதல்

இளாலிக் கடற்பரப்பில் நேற்று முன்தினம் அதிகாலை புலிகளால் மூழ்கடிக்கப்பட்ட கடற்படையினரின் இரு நீருந்து விசைப்படகுகளை யும், கொல்லப்பட்ட கடற் படையினரையும் தேடும் முயற்சியில் நேற்று ஈடுபட முயன்ற கடற்படையினரின் மூன்று விசைப்படகுகள் மீது நேற்று மாலை கடற்புலிகள் கடும் தாக்குதலை நடத்தினர்.

இதனை அடுத்து கடற் படையினர் அங்கிருந்து உட னடியாகப் பின்வாங்கிச் சென் றனர்.

தொடர்ந்து இரு ஹெலி களும், இரு புக்காரா விமா

(2 ஆம் பக்கம் பார்க்க)

## இன்று

## படகுச்சேவை

யாழ்ப்பாணம், ஆக. 28

இளாலி-பூநகரி படகுச்சேவை இன்று சனிக்கிழமை வழமை யான நேரத்துக்கு நடைபெ றும் என்று யாழ். மாவட்ட நிதித்துறைவருவாய்ப்பொறுப் பாளர் அறிவித்துள்ளார்.

## படையினர் சடலங்கள்

## ஒப்படைக்க ஏற்பாடு?

யாழ்ப்பாணம், ஆக. 28

இளாலிக் கடலில் கைப்பற் றப்பட்ட கடற்படையினரின் 4 சடலங்களும் இன்று செஞ் சிலுவைச்சங்க சர்வதேசக்குழு அதிகாரிகளிடம் ஒப்படைக்கப் படலாம் என எதிர்பார்க்கப் படுகிறது.

படையினரின் சடலங்கள் நேற்று மாலை செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு அதிகாரி களிடம் ஒப்படைக்க ஏற்பாடு கள் செய்யப்பட்டதாகவும்— இறுதியில் அந்த முயற்சி கைவிடப்பட்டதாகவும்— தெரியவந்தது.

இதற்கிடையில்— படையினரின் சடலங்கள் தென்மராட்சி உட்பட குடா நாட்டின் பல இடங்களிலும் மக்கள் பார்வைக்காக வைக் கப்பட்டன. (ஓ.சீ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

ஊர்காவற்றுறை – நாரந்தனை

அருள்பெருகு

தான்தோன்றி ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலயம்

**இரதோற்சவ தின வழிபாடு**

**30 – 08 – 93 திங்கள் காலை 9. 00 மணி**

மேற்படி வழிபாடு நல்லூர் முத்திரைச் சந்திக்கும் கச்சேரிக்கும் இடையில் உள்ள கச்சேரி - நல்லூர் வீதியில் கோயில்கொண்டு எழுந்தருளியுள்ள ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலயத்தில் நடைபெறத் திருவருள் கூட்டியுள்ளது.

அனைவரும் கலந்துகொண்டு அருள் பெறுவோமாக.

— சைவமகாசபை.

(27094)



உ

ஓம் ஸ்ரீ நாராயணாய நம

அளவெட்டி – நாகேஸ்வரம்

**ஸ்ரீநாகவரத நாராயணர் தேவஸ்தானம்**

**மஹோற்சவ விஞ்ஞாபனம்**

**30-08-1993 — 10-09-1993**

கொடியேற்றம் :- 30-08-93 திங்கள் பகல் 11-30 மணி

தேர் சங்காபிஷேகம் :- 08-09-93 புதன் காலை 7-30 மணி

தேர் வீதிவலம் :- ,, ,, ,, 10 00 ,,

உறியடி உற்சவம் :- ,, ,, மாலை 7-00 ,,

தீர்த்தம் :- 09-09-93 வியாழன் காலை 9-30 ,,

(அடியார்கள் ஸ்ரீரங்கநாதர் திருவடிகளைப் பூசித்தல்)

தீர்த்தோற்சவம் :- 09-09-93 வியாழன் பகல் 11-00 மணி

ஆஞ்சநேயர் வைரவர் பொங்கல் :- 10-09-93 வெள்ளி பகல் 9-00 மணி

திருக்கல்யாணம் :- 10-09-93 வெள்ளி பிற்பகல் 8-30 மணி

**மகாபாரத விரிவுரை**

விசேட சொற்பொழிவு—தினமும் மாலை 6-45 மணி

நிகழ்த்துபவர் :- "சிவத்தமிழ்வித்தகர்"

திரு. சிவ. மகாலிங்கம் (B.A) அவர்கள்

(விரிவுரையாளர் :- பலாலி ஆசிரிய கலாசாலை)

இங்ஙனம் :

பொறுப்புரிமை பரிபாலனசபை

(கி/5856)



**சீன் கல்வி நிலையம்**

திருநெல்வேலி.

**A/L 94 DAY CLASS**

பொருளியல்

S. வரதராஜன்

B. A. (Hons)

செவ்/வியா: 8 - 9 விலைக்கோட்பாடு

செவ்/வியா: 9 - 10 தேசியவருமானம்

ஆரம்பம்: 02 - 09 - 93

வியாழன் 8 - 00 a. m.

(சி/5848)


# காவியம் படைத்த வீரர்களுக்கு குடாநாட்டில் மக்கள் அஞ்சலி

யாழ்ப்பாணம், ஆக. 28

கிளாலிக் கடற்பரப்பில் நேற்று முன்தினம் வீரகாவியம் படைத்த கடற்புலி வீரர்களுக்கு குடாநாடு எங்கும் மற்றும் வன்னிப் பகுதியிலும் நேற்று மக்கள் உணர்வுபூர்வமாக தமது அஞ்சலியைச் செலுத்தினர்.

கிளாலிக் கடற்பரப்பில் மக்களைப் பாதுகாக்கும் பணியில் ஈடுபட்டு வந்த அந்த மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் குடாநாட்டு மக்கள் நேற்று களியாட்டங்களைத் தவிர்த்துக் கொண்டனர்.

வீதிகள், கடைகள், பொது ஸ்தாபனங்கள் எங்கும் வாழை, தோரணங்களும், கறுப்பு மற்றும் மஞ்சள் சிவப்புக் கொடிகளும் காணப்பட்டன. எங்கும் சோககீதங்கள் இசைக்கப்பட்டன.

கடற் கரும்புலிகளான மேஜர் நீலவன் (வரதன்), கப்டன் மதன் ஆகியோரின் திரு உருவப்படங்களும், கடற்புலிகளான கப்டன் சிவா, லெப்டினன்ட் பூவான், 2ஆம் லெப்டினன்ட் சுரேந்தர் ஆகியோரின் வித்துடல்களும் நேற்றுக் காலை நாகர்கோவிலில் இருந்து தென்மராட்சி ஊடாக யாழ்ப்பாணம் கொண்டுவரப்பட்டு வடமராட்சிக்கு எடுத்துச் செல்லப்பட்டன.

இறுதி ஊர்வலம் சென்ற வீதிகள் எங்கும் மக்கள் மலர் தூவி தமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்தினர். குறிப்பிட்ட சில இடங்களில் அலங்கரிக்கப்பட்ட மேடைகள் அமைக்கப்பட்டு திருவுருவப் படங்களும், வித்துடல்களும் மக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தன. அங்கு திரண்டு வந்த மக்கள் கண்ணீர் மல்க தமது இறுதி அஞ்சலியைச் செலுத்தினர்.

இறுதியாக நேற்று மாலை வடமராட்சியில் மாவீரர் துயிலும் இல்லத்தில் நினைவுக் கல் நாட்டல் நிகழ்ச்சி இடம்பெற்று, மாவீரர்களின் வித்துடல்கள் இராணுவ மரியாதையுடன் விதைக்கப்பட்டன. (ஓ-3 15-17 51-71 117-143-162-173)

## விண்ணப்ப திகதி நீடிப்பு

கொழும்பு, ஆக. 28

பொது எழுதுவினைஞர் சேவையின் தரம் II 'அ' பிரிவைச்சேர்ந்த உத்தியோகத்தர்களை வகுப்பு ஒன்றிற்கு பதவி உயர்த்தும் தகுதிகாண் பரீட்சைக்கான (1993) விண்ணப்பங்களை அனுப்பும் கடைசிநாள் எதிர்வரும் 30 ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டிருப்பதாக பொது நிர்வாக மாகாண சபைகள் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு அறிவித்துள்ளது. (இ-5)

## சிமெந்து ஊழியர் சம்பளம்

யாழ்ப்பாணம், ஆக. 28

காங்கேசன் சிமெந்துக் கூட்டுத்தாபன ஊழியர்களுக்கான —ஜூலை மாதத்துக்குரிய— சம்பளம் நாளை மறுதினம் முதல் தற்காலிக பணிமனையில் வைத்து வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## இன்று பயணமில்லை

யாழ்ப்பாணம், ஆக. 28

குடாநாட்டில் இருந்து பயணிகள் இன்று "நரோமா" கப்பலில் கொழும்பு செல்ல முடியாது.

யாழ். அரசாங்க அதிபர் நேற்று மாலை வெளியிட்ட செய்திக் குறிப்பில் இத்தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னர் பிரன்தாப கப்பலில் இன்று பயணம் செய்ய முடியும் என அறிவிக்கப்பட்டிருந்தது. (அ-3)

## மிருதங்க அரங்கேற்றம்

மயிலணி, ஆக. 28

செல்வன் நாகேஸ்வரக் குருக்கள்- சிவசுந்தரின் மிருதங்க அரங்கேற்றம் இன்று இணுவில் கந்தசாமி கோயில் இளந்தொண்டர் சபை மண்டபத்தில் பி. ப 3 30 மணிக்கு கலாநிதி சபா. ஜெயராசா (தலைவர் இராமநாதன் நுண்கலைப்பீடம்) தலைமையில் இடம்பெறும். (ஓ-89)

## மழை

யாழ்ப்பாணம், ஆக. 28

நீண்ட நாட்களின் பின் யாழ் நகரில் நேற்று அதிகாலை கமாரான மழை பெய்தது. (ஓ-5-100)

## சில்லாலைப் பெண்மணி மிதிவெடியில் சிக்கி மரணம்

யாழ்ப்பாணம், ஆக. 28

சில்லாலைப்பகுதியில்கடந்த புதன்கிழமை மிதிவெடியில் சிக்கி பெண்மணி ஒருவர் உயிரிழந்தார். அதேயிடத்தைச் சேர்ந்த திரேசா புஸ்பம் (60 வயது) என்னும் இந்தப் பெண்மணி விறகு தேடிச் சென்ற சமயம், இந்த விபரீதம் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

சம்பவம் நடந்த தினம் இவர் வீட்டுக்கு திரும்பி வந்து சேராததை அடுத்து நேற்று முன்தினம் தேடிச் சென்ற பொழுதே சடலம் கண்டுபிடிக்கப்பட்டதாக உறவினர்களால் தெரிவிக்கப்பட்டது.

மிதிவெடியில் சிக்குண்டே இவர் உயிரிழந்தார் என்றும் உறவினர்கள் தெரிவித்தனர்.

## சித்த மருத்துவ கருத்தரங்கு

உள்ளூராட்சித் திணைக்களமும் சித்த வைத்தியக் கூட்டுறவுச் சங்கமும் இணைந்து நடத்தும் "சித்த மருத்துவம் மக்கள் மயப்படுத்தல்" என்ற தலைப்பிலான கருத்தரங்கு நாளை ஞாயிற்றுக்கிழமையும், நாளை மறுதினமும் யாழ் இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் காலை 8-30 மணி முதல் மாலை 4 மணி வரை நடைபெறும்.

நிகழ்ச்சிகளில் பிரதம விருந்தினராக தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் திரு. கரிகாலன் கலந்துகொள்வார்.

யாழ். கூட்டுறவு உதவி ஆணையாளரும், சித்த வைத்திய கூட்டுறவுச் சங்கத் தலைவருமான திரு. இ. சபாரத்தினம் தலைமையில் முதல் நாள் நிகழ்ச்சிகளும் பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. சுந்தரம் டிவகலாலா தலைமையில் இரண்டாம் நாள் நிகழ்ச்சிகளும் நடைபெறும். (த)

## செங்கை ஆழியான் கலாநிதியானார்

யாழ்ப்பாணம், ஆக. 28

பிரபல எழுத்தாளர் செங்கை ஆழியான் (க. குணராசா) யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் கலாநிதிப் பட்டத்தைப் பெற்றுள்ளார்.

"வட இலங்கையின் குடியேற்றத் திட்டங்களும் காணி அபிவிருத்தியும்" என்ற பொருளில் 1991 ஆம் ஆண்டில் சமர்ப்பித்த ஆய்வினுக்காகவே இவருக்கு கலாநிதி [புவியியல்] பட்டம் வழங்கப்படுகிறது.

அடுத்த மாதம் 11 ஆம் திகதி நடைபெறும் யாழ்.பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் செங்கை ஆழியான் தமக்குரிய கலாநிதிப் பட்டத்தை உத்தியோக பூர்வமாகப் பெற்றுக் கொள்வார்.

இவருக்குரிய கலாநிதிப் பட்டம் 6-12-1991 முதல் செல்லுபடியாவதாக யாழ்.பல்கலைக்கழகம் அறிவித்திருக்கிறது. (அ-க-17)

## பறாளாய் .

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

காலை 8-30 மணிக்கு பூசை நடைபெற்றுக் கொண்டிருந்த போது இத்தாக்குதல் நடைபெற்றது. தெய்வாதீனமாக எவரும் காயமடையவில்லை

சுழிபுரம் செட்டிகுறிச்சி சிவன் கோவில் மீது விழுந்த ஷெல்களினால் மூலஸ்தானத்தைத் தவிர ஏனைய மண்டபங்கள், நவக்கிரக மண்டபம், மடப்பள்ளி என்பன முற்றாகச் சேதமடைந்தன. நவக்கிரக விக்கிரங்கள் சிதறி ஒன்றுமில்லாமற் போயின. (உ-15)

## மக்கள்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சரமாக வீடுகளை விட்டு வெளியேறி இடம்பெயர்ந்தனர்.

இடம்பெயர்ந்த மக்களில் அதிகமானோர் மனிப்பாய், நவாலி, ஆனைக்கோட்டை ஆகிய பகுதிகளில் தஞ்சமடைந்தனர்.

மாலை ஐந்து மணியளவில் நிலைமை ஓரளவு வழமைக்குத் திரும்பியதை அடுத்து இடம்பெயர்ந்த மக்களின் ஒரு பகுதியினர் தத்தமது வீடுகளுக்குத் திரும்பிக் கொண்டிருந்ததைக் காணமுடிந்தது. (உ)

## துர்க்காதேவி தேர்த்திருவிழா

யாழ்ப்பாணம், ஆக. 28

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவி ஆலயத் தேர்த்திருவிழா நாளை காலை 9 மணிக்கு நடைபெறவிருக்கிறது.

துர்க்கை அம்மன் தேரில் வந்து அருட்காட்சி தருவதைக் கண்டு தரிசிப்பதற்காக குடாநாட்டின் பல பகுதிகளில் இருந்தும் அடியார்கள் நாளை ஆலயத்தில் கூடுவர். (அ 3)

## உயர்நீதிமன்றம் தீர்ப்பு

கொழும்பு, ஆக. 28

களுத்துறை மாவட்ட எம். பி. திலக்கருணாரத்தினாவை சுதந்திரக்கட்சியில் இருந்து வெளியேற்றியது செல்லாது என்று உயர்நீதிமன்றம் நேற்றுத் தீர்ப்பளித்தது.

## கிளாலிக்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

னங்களும் கிளாலிப் பகுதியில் மாறி மாறி தாக்குதல்களை நடத்தின.

நேற்று முற்பகல் சுமார் 11 மணிக்கும் புக்காரா விமானம் கிளாலிப் பகுதியில் ரொக்கட் தாக்குதல்களை நடத்தியது.

பூநகரிப் பகுதியிலிருந்து கிளாலிக் கரையை நோக்கி கடும் ஷெல் தாக்குதல்களும் நடத்தப்பட்டன.

## பொம்மர்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சிதறிப் பலியாகினர்.

பிற்பகல் இரண்டு மணியளவில் சித்தன்கேணி சந்திக்கு அருகில் இடம்பெற்ற குண்டு வீச்சில் அச்சக உரிமையாளர் ஒருவர் உயிரிழந்தார். படுகாயமடைந்த அவரது மனைவி ஆஸ்பத்திரியில் மரணமானார்.

இதே சம்பவத்தில் வழிப்போக்கர் ஒருவர் உடல் சிதறிப் பலியானார்.

விமானக் குண்டு வீச்சால் பறாளாய் முருகமூர்த்தி கோயில் மற்றும் பல வீடுகள், வாகனங்கள், கடைகள், அச்சகம் ஆகியன சேதமடைந்தன.

### ஷெல் தாக்குதல்

காரைநகர், மாதகல், அளவெட்டிப் பகுதிகளிலிருந்து உக்கிர ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

பண்ணாகம், சில்லாலை, பண்டத்தரிப்பு, சுழிபுரம் மேற்கு, பனிப்புலம், சாந்தைப் பகுதிகளில் இந்த ஷெல்கள் விழுந்து பெரும் சத்தத்துடன் வெடித்தன.

ஷெல்லினாலும் பெருமளவு உடைமைச் சேதம் ஏற்பட்டது.

### குடாநாடு அதிர்ந்தது

கடற் பிராந்தியத்தில் தரித்து நின்ற கப்பல்களிலிருந்து பீரங்கிக் குண்டுகளும் விடாது தீர்க்கப்பட்டன. சுழிபுரம் பகுதியில் பீரங்கிக் குண்டுகளின் சிதறல்கள் வீழ்ந்தன.

இத் தாக்குதல்களினால் நேற்று முற்பகல் முழுவதும் யாழ். குடாநாடு அதிர்ந்தது.

இதேசமயம்நேற்றுக் காலை 7-30 மணியளவில் மாதகல், பலாலி, தெல்லிப்பளை முகாம்களில் இருந்து ஏவப்பட்ட பத்துக்கும் மேற்பட்ட ஷெல்கள் அளவெட்டி வடக்கு தம்பழைப் பகுதியிலும் தோட்ட வெளியிலும் கீரிமலை, ஏழாலை, மல்லாகம் பகுதிகளிலும் விழுந்து வெடித்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழக கரையோர முகாம்களில் புலிப் போராளிகளுக்குப் பயிற்சியாம்

## தாயகம் திரும்பும் அகதிகள் தீவிர விசாரணையில்

கொழும்பு, ஆக. 28 தமிழகக் கரையோர முகாம்களில் வைத்து விடுதலைப் புலிகள் இயக்கம் தனது போராளிகளுக்கு இன்னும் பயிற்சி அளித்து வருவதாக நம்பகமான தகவல்கள் கிடைத்திருப்பதாக அதிகாரபூர்வ இராணுவ வட்டாரங்கள் கூறின என்றும் —

இதை அடுத்து தமிழகத்தில் இருந்து தாயகம் திரும்பும் இலங்கைத் தமிழ் அகதிகள் தற்காலிக அகதிகள் முகாம்களுக்கு அனுப்பி வைக்கப்படுவதற்கு முன்பதாக தீவிர விசாரணைக்குட்படுத்தப்படுகின்றனர் என்றும் —

புலனாய்வு வட்டாரங்களை மேற்கோள் காட்டி "த ஐலண்ட்" நாளிதழ் செய்தி வெளியிட்டிருக்கிறது.

பயிற்சி பெற்ற விடுதலைப் புலிகளும் அகதிகளுடன் சேர்ந்து தாயகம் திரும்புவதாக பாதுகாப்பு அதிகாரிகளுக்குத் தகவல் கிடைத்திருப்பதைத் தொடர்ந்து, இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்னையில் இருந்து கொழும்புக்குக் கிடைத்த தகவல்களின் படி —

விடுதலைப்புலிகள் தமிழகத்தில் தமது போராளிகளுக்கும் தமிழ் நாட்டைச் சேர்ந்த தீவிரவாதிகளுக்கும் பயிற்சி அளித்து வருவதாகவும் 'த ஐலண்ட்' செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பயிற்சி பெறும் தமிழ் நாட்டைச் சேர்ந்த தீவிரவாதிகள் அங்கு தனிநாடு ஒன்றை அமைக்கப் போராடுபவர்கள் என்றும் அப்பத்திரிகைச் செய்தி தெரிவிக்கிறது

கடந்த வாரம் திருகோணமலைக்கும், மன்னாருக்கும் திரும்பிய இலங்கைத் தமிழ் அகதிகள் தற்போது விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்கள் என்றும் அவ்வட்டாரங்கள் கூறின. (ஒ-எ)

## கொண்டச்சியில் இருந்தும் படையினர் முற்றாக வாபஸ்

கொழும்பு, ஆக. 28 மன்னார் - கொண்டச்சியில் இருந்தும் தனது துருப்புக்களை கடந்த வாரம் இராணுவம் முற்றாக விலக்கிக் கொண்டு விட்டதாக அறிவிக்கப்படுகிறது.

மன்னார் பெருநிலப்பரப்பில் இருந்து படையினரை வாபஸ் வாங்கும் நடவடிக்கையின் ஒரு கட்டமாகவே இராணுவ உயர்கட்டளைப்பீடம் கொண்டச்சி முகாமில் இருந்தும் படையினரை விலக்கிக் கொண்டு விட்டதாக "த ஐலண்ட்" செய்தி வெளியிட்டிருக்கிறது. கொண்டச்சியில் முந்திரிகைப் பண்ணையில் இராணுவ முகாம் அமைந்திருந்தது.

மன்னார் பெருநிலப்பரப்பில் இருந்து ஒரு பட்டாலியன் — ஆயிரம் துருப்புக்கள் வரையில் வாபஸ் வாங்கப்பட்டதாக ஆயுதப்படை வட்டாரங்கள் கூறின.

## தென்பகுதி பத்திரிகையாளர் யாழ் வருவதற்கு முயற்சி

கொழும்பு, ஆக. 28 பி.பி.சியின் சிங்களச் சேவையான "சந்தேசய", வெரித்தாஸ் வானொலியின் சிங்களச் சேவை மற்றும் லங்கா தீப சிங்களப் பத்திரிகை ஆகியவற்றைச் சேர்ந்த பத்திரிகையாளர்கள் படப்பிடிப்பாளர்கள் அடங்கிய குழு ஒன்று விரைவில் யாழ். வரவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்ய அனுமதி கோரி இவர்கள் கூட்டுப்படைகள் தலைமையகத்திடமும், விடுதலைப் புலிகளிடமும் அனுமதி கோரியிருப்பதாக அறியவருகிறது.

## காணாமற் போனோரை கண்டுபிடிக்க ஆணைக்குழு

காணாமற் போனவர்களை கண்டு பிடிப்பதற்கு புதிய ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆணைக் குழுவுக்கு பரவலான அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன என்றும் —

காணாமற் போனவர்கள் பற்றிக் கிடைக்கும் முறைப்பாடுகளை உடனுக்குடன் விசாரித்து தவறு செய்வோருக்கு எதிராக துரித நடவடிக்கை எடுப்பது அதன் நோக்கமே என்றும் — ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது.

முன்னைய ஆணைக்குழுவின் விசாரணை நடைமுறைகள் பெருமளவு தாமதத்தை ஏற்படுத்தியதால் முறைப்பாடுகள் உரிய காலத்தில் விசாரிக்கப்படவில்லை என்றும் —

முன்னைய ஆணைக்குழுவின் உறுப்பினர்களும் புதிய ஆணைக்குழுவில் இடம்பெற்றுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ-162)

மீண்டும்!

மாணவர்களினதும், பெற்றோர்களினதும் நன்மதிப்பைப் பெற்ற

"SAFE SCHOOL BUS"

சேவ்(f) பாடசாலை பஸ்

பாடசாலை சேவை 01-09-1993 புதன்கிழமை வழமையான நேரத்திற்கு ஆரம்பமாகிறது.

எமது சேவை வட்டுக்கோட்டையிலிருந்து ஆரம்பமாகி மாவடி, மூளாய், சுளிபுரம், சித்தன்கேணி, சங்கானை, சண்டிலிப்பாய், மானிப்பாய் ஊடாக யாழ். பிரபல பாடசாலைகள் வரை நடைபெறும்.

ஆகக் கூடிய கட்டணமாக 300 ரூபாவும்

ஆகக் குறைந்த கட்டணமாக 200 ரூபாவும்

வழமை போல விடுமுறை காலங்களில் கட்டணம் இல்லை. ஒரே குடும்பத்தில் ஒருவருக்கு மேற்பட்டவர்களுக்கு சலுகை உண்டு.

மேலதிக நேர, கட்டண விவரங்களுக்கு:

அ. சிவகாந்தா (சிவா), M.P.C.S. அருகாமை, சங்கானை.

குலம் கிறீம் ஹவுஸ், அந்தோனியார் கோவிலடி, மானிப்பாய்.

(27079)

## விடுதலையான 23 தமிழ் இளைஞர்கள் விவரம்

கொழும்பு, ஆக. 28 கண்டி பல்லேகல இளைஞர் புனர்வாழ்வு முகாமில் இருந்து மேலும் 23 தமிழ் இளைஞர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

புனர்வாழ்வு ஆணையாளர் பிரிகேடியர் ஆனந்த வீரசேகர முன்னிலையில் இவர்கள் 23 பேரும் அவர்களின் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

விடுதலையான இளைஞர் பெயர் விவரம் வருமாறு:

கனகசபை ராஜேந்திரன் (வல்வெட்டித்துறை), செல்லையா துரைரத்தினம் (காங்கேசன்துறை), வேலுசாமி சாந்தலிங்கம் (தாளையடி), வெள்ளிமயில் குணபாலசிங்கம் (பருத்தித்துறை), தட்சிணாமூர்த்தி திருஞானமூர்த்தி (தாளையடி)

திருவெங்கடேஸ்வரன் அன்பலன் (மாதகல்), முருகேசு குமாரராஜா (அல்வாய்) ஜூலியட் பிராங்கிளின் (அல்வாய்), கணபதிப்பிள்ளை சுப்பிரமணியம் (பருத்தித்துறை), வேலுசாமி குவீந்திரன் (தாளையடி வடக்கு), மகாலிங்கம் பொன்னுத்துரை (பருத்தித்துறை), செல்வக்கதிரமலை செல்வமனோகர் (வல்வெட்டித்துறை), பீட்டர் அருந்தவராஜன் (வல்வெட்டித்துறை), சாந்தலிங்கம் அருமைத்துரை (வல்வெட்டித்துறை), இ. அரியரத்தினம் (இளவாலை) (இ-5)

## ஆயித்தியமலையில் படைகள் பதுங்கி இருந்து தாக்குதல்

யாழ்ப்பாணம், ஆக. 28 மட்டக்களப்பு மாவட்டம் ஆயித்தியமலை என்னுமிடத்தில் கடந்த மாதம் 11ஆம் திகதி இராணுவத்தினர் பதுங்கியிருந்து தாக்கியதில் விடுதலைப் புலிகளின் ஆதரவாளரான சிவனேசபிள்ளை (நாவற்காடு) என்பவர் வீரச்சாவடைந்தார்.

கடந்த மாதம் 29ஆம் திகதி அதிகாலை பாலமடு என்னுமிடத்தில் சுற்றிவளைப்பில் ஈடுபட்ட படையினருடன் இடம்பெற்ற மோதலில் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகள் இருவரும் ஆதரவாளர் ஒருவரும் வீரச்சாவடைந்தனர்.

★ வீரவேங்கை நிரோஜன் (சரவணமுத்து வடிவேல் — கிண்ணியடி, வாழைச்சேனை)

★ வீரவேங்கை மாணிக்கராஜ் அல்லது கிருஷ்ணா (தங்கவடிவேல் இராமகிருஷ்ணர் — சின்னப்புல்லுமலை, கரடியனாறு) ஆகியோரே வீரச்சாவை அடைந்தவர்கள் ஆவர். (இ 5)

## சந்நிதி முருகன் தேர்

யாழ்ப்பாணம், ஆக. 28 தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலயத் தேர்த் திருவிழா எதிர்வரும் செவ்வாய்க்கிழமை நடைபெறும். மறுநாள் தீர்த்தத் திருவிழாவும், 2ஆம் திகதி பூந்திருவிழாவும் நடைபெறும். இன்று சப்பறத் திருவிழா நடைபெறும்.

காலைத் திருவிழா 8 மணிக்கு நடைபெறும். இரவுத் திருவிழா மாலை 6 மணிக்கு முடிவடையும். (ந)

## அடையாள அட்டைகள் வந்து சேர்ந்தன

யாழ்ப்பாணம், ஆக. 28 வாதுவ கப்பலில் ஆயிரம் தேசிய அடையாள அட்டைகள் எடுத்துவரப்பட்டுள்ளன. (இ-100)

### அறிவித்தல்

கல்விப் பட்டப்பின் டிப்ளோமா ஆண்டு பரீட்சை 1992

கல்விப் பட்டப்பின் டிப்ளோமா முழுநேரம், பகுதிநேரம் - 1 பகுதிநேரம்-11 ஆகிய மாணவர்கள் ஆண்டுப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு விண்ணப்பங்களைப் பரீட்சைக்கிளையில் பெற்று, பூர்த்தி செய்து உதவிப் பதிவாளர் / பரீட்சைகள் அலுவலகத்தில் 1993-09-15 ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ சமர்ப்பிக்குமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

பரீட்சார்த்திகள் ஒரு பாடத்திற்கு ரூபா 15/- வீதம் பல்கலைக்கழக காசாளரிடம் செலுத்தி அதற்கான பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்துடன் இணைத்தல் வேண்டும்;

— பதிவாளர்.

பரீட்சைக்கிளை,
யாழ். பல்கலைக்கழகம்,
25-08-1993.

பிரத்தியேக வகுப்பு

A/L 94

கணக்கியல்

புதிய அலகும் வினா - விடை வகுப்பும்

ஆசிரியர் D. SAM

ஆரம்பம் 1993 - 08 - 29 ஞாயிறு மாலை 3 மணி.

(27083)

மணமகன் தேவை

கவர்ச்சிமிக்க, பொது நிறமுள்ள, சதய நட்சத்திரம், பாவமும், செவ்வாய் தோஷமற்ற— 5' 5½" உயரம், கிழக்கிலங்கையில் வங்கியில் எழுதுவினைஞராக வேலைபார்க்கும் வண்டன் சுருக்கெழுத்தில் தகைமை பெற்ற — கணினியியல் ஓரளவு தேர்ச்சி பெற்ற நவீனவீடு, சொத்துக்கு உரியவரான 32 வயது, ஆனால் இளமைத் தோற்றமுள்ள— மணமகளுக்கு யாழ். இந்து பாரம்பரிய நற்குடும்பத்தை சேர்ந்த பட்டப்படிப்பு தேர்ச்சி பெற்ற நற்குணமுள்ள மணமகனை பெற்றோர் தேடுகின்றனர். வெளிநாட்டவராயின் இலங்கை வந்து விவாகம் செய்து அழைத்துச் செல்லக்கூடியவராக இருத்தல் விரும்பத்தக்கது. கடிதத் தொடர்புகள் அந்தரங்கமாக வைத்திருக்கப்படும். விரும்பினால் திருப்பி அனுப்பி வைக்கப்படும்.

இல. 16 மே/பா உதயன் சேவை நிலையம்,
82, கே. கே. எஸ். வீதி,
சுன்னாகம்.

(6633)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

அச்சகப் பாவிப்பிற்குரிய இங்கிலாந்து தயாரிப்பான இன்லின் டெமிஸிலிண்டர் மெஷின் நல்ல நிலைமையில் விற்பனைக்குண்டு. விவரங்களுக்கு இல. 553, மே/பா உதயன், நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (சி-5818)

புதிய நல்ல நிலையிலுள்ள வெஸ்பா L.M.L. [T5] விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும்: உமாசங்கர், நெடியகாடு, வல்வெட்டித்துறை. (27078)

புறொயிலர் இறைச்சிக் கோழிகள் விற்பனைக்குண்டு. பிளான் பரடைஸ், இல. 152/2, கோவில் வீதி, யாழ்ப்பாணம். (27090)

10 அங்குல English கிறைன்டர் விற்பனைக்குண்டு. விமலம் மில், நீராவியடி, யாழ்ப்பாணம். (27077)

நல்ல நிலையிலுள்ள செக்கோஸ்லோவேக்கியா தயாரிப்பான வயலின் விற்பனைக்குண்டு. தொடர்பு: த. ரவீந்திரராசா, பூரண சந்திரன் வீதி, மாதா கோவிலடி, கோப்பாய் தெற்கு, கோப்பாய். (6450)

### இலவச திருமண சேவை

34 வயது, ஆயிலியம், செவ்வாயற்ற, டென்மார்க் மணமான் யாழ். வந்துள்ளார். திருமணம் செய்து அழைக்கவாம். ஏற்ற மணப்பெண் தேவை. தொடர்பு ஞாயிறு காலையில்: து. விமலா, இலவச திருமண சேவை, யாழ். நாச்சிமார் கோவிலடி. [27075]

### ஆண்டு 6 அனுமதிப்பரீட்சை

பிரபல பாடசாலைகளுக்கான மாதிரி அனுமதிப் பரீட்சை ஆண்டு 5 மாணவருக்கு 29-08-93 ஞாயிறு முற்பகல் 8-00, 11-00 நேரங்களில் நடைபெறும். மாதிரி வகுப்புகளும் நடைபெறுகின்றன. இணைய விரும்புவோர் தொடர்பு கொள்க: புதிய கல்வி நிலையம், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (27045)

### இறைச்சிக் கோழிகள்

Broiler இறைச்சிக்கோழிகள் சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 8-00—11-00 வரை சுத்தம்செய்து பெற்றுக்கொள்ளலாம். நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (27087)

### நாய்க்குட்டிகள்

அழகிய பொமனேரியன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. (சகல தடுப்பு ஊசிகளும் போடப்பட்டவை) தொடர்பு: இல. 48/1, முதலாம் ஒழுங்கை (ஐங்கரன் விளையாட்டுக் கழக வீதி), பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். (27091)

### சியாக்காய்ப்பவுடர்

காவேரி சியாக்காய்ப்பவுடர். பேன், சொடுகு, அழுக்கு அறவேயில்லாமல்செய்யும். சரசாலையில் கிடைக்குமிடம்: சூரி விற்பனை நிலையம், புத்தூர் றோட், சரசாலை. (26780)

### தேவை

யாழ் நகரின் முன்னணி மருந்து விற்பனை நிலையத்துக்கு 10 வருட அனுபவமுள்ள விற்பனை பிரதிநிதி தேவை. தொடர்பு: 915, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (6148)

யாழ். மாநகரசபை எல்லைக்குள் ஆசிரியை ஒருவருக்கு சாப்பாட்டு வசதியுடன் அறை அல்லது வீடு வாடகைக்கு தேவை. தொடர்பு: இல. 555, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (27080)

பட்டுப்புடவை வியாபாரத்தில் குறைந்தது இரண்டு வருடத்துக்கு மேற்பட்ட அனுபவமுள்ள விற்பனையாளர் தேவை. மாநகர எல்லைக்குள் வசிப்பவர் விரும்பத்தக்கது. சோபனா ஆடை அகம், 16, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம். (சி-6007)

யாழ். நகரில் ஆண்டு 5, 7, 10 ஆகிய வகுப்புகளுக்கு தமிழ், கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகிய பாடங்களை வீட்டில் கற்றுத்தர அனுபவமுள்ள ஆசிரியர்கள் தேவை. விவரங்கள்: சோபனா ஆடை ஆகம், 16, பெரியகடை, யாழ்ப்பாணம். (சி-6008)

---

## வெளிவாரிப் பட்டப் படிப்புகள்

G. A. Q.; 1st in Com.

**பொருளியல்**
**S. வரதராஜன் B. A. (Hons)**

பேராதனைப் பல்கலைக்கழகம்
சனி, ஞாயிறு - 4 — 5 பி. ப.
செலவுக் கோட்பாடு
செவ்., வியாழன் - 6-30 — 7-30 மு. ப.
இலங்கையின் பொருளாதார வரலாறு
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
சனி, ஞாயிறு - 4 — 5 பி. ப. அல்லது
புதன், வெள்ளி - 6-30 — 7-30 மு. ப.
செலவுக் கோட்பாடு

**ஆரம்பம்: 1 - 9 - 93 புதன்**

**BECON**
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (சி-6004)

---

## அகில இலங்கை இளங் கலைஞர் மன்றம்
## மாதாந்த இசை நிகழ்ச்சி

மணியம் வர்த்தக நிலையம்,
பலாலி வீதி, திருநெல்வேலி
ஆதரவில்

இடம்: மன்றக் கலா மண்டபம்,
சட்டநாதர் வீதி, நல்லூர்.

காலம்: 29 — 08 — 1993 ஞாயிறு
மாலை 5மணி

### நிகழ்ச்சி நிரல்

மாலை 5·00 — 5·45 வயலின் இசை
செல்வி குமுதினி கனகரெட்ணம் — வயலின்
திரு. எஸ். மகேந்திரன் — மிருதங்கம்
திரு. எஸ். துரைராஜா — கெஞ்சிரா

5·45 — 6·45 இசைக்கச்சேரி
திரு. பொன். ஸ்ரீ வாமதேவன் — பாட்டு
திரு. வி. ஆர். இராதாகிருஷ்ணன் — வயலின்
திரு. எம். சிதம்பரநாதன் — மிருதங்கம்
திரு. கே. கண்ணதாசன் — கடம்

6·45 — 7·15 மங்கள விளக்கேற்றல்
1. திரு. ம. பாலசுப்பிரமணியம், உரிமையாளர், மணியம் வர்த்தக நிலையம், திருநெல்வேலி
2. திரு. கி. கணேசராசா உரிமையாளர், கணேசன் வர்த்தக நிலையம், மார்க்கட், திருநெல்வேலி

தலைமையுரை: திரு சா. மதியாபரணம் ஜே. பி., (முன்னாள் புங்குடுதீவு-ஊராட்சிமன்றத் தலைவர்)

பிரதம விருந்தினர் உரை:
திரு. சி. சிவலிங்கராசா எம். ஏ., (சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ். பல்கலைக்கழகம்)

7·15 — 8·45 சிறப்பு நிகழ்ச்சி
தென்மராட்சி திலகநர்த்தனாலயம் வழங்கும்
★ பரதநாட்டிய நிகழ்ச்சி
நட்டுவாங்கம் — நாட்டியக் கலைமணி திருமதி யசோதா விவேகானந்தன்
பாட்டு — திரு. பொன். ஸ்ரீ வாமதேவன், திருமதி சௌந்தரவல்லி தர்மலிங்கம்
மிருதங்கம் — எஸ். துரைராசா
வயலின் — திருமதி தியாகேஸ்வரி சிவநாதன்

இசை ஆர்வலர்கள், அபிமானிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்!

(27088) — மேற்படி மன்றத்தினர்.

---

## BECON
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

## A/L 94 DAY CLASS

| ஆசிரியர்கள் | பாடங்கள் | செவ். / வியா. | சனி / ஞாயிறு |
|---|---|---|---|
| பசில் | வர்த்தகம் | 8 — 10 | — |
| வரதராஜன் | பொருளியல் | 10 — 12 | — |
| சௌந்தர் | கணக்கியல் | 12 — 2 | — |
| S S. மனோகரன் | அளவையியல் | — | 10 — 11 |
| மீரா | தமிழ் | — | 11 — 12 |
| பாலா | இந்து நாகரிகம் | — | 9 — 10 |
| பஞ்சாட்சரம் | அரசியல் | — | 8 — 9 |
| நிரஞ்சன் | கிறிஸ்தவம் | — | 9 — 10 |

**ஆரம்பம்: 02 – 09 – 1993**
வியாழன் 8.00 மணி

(சி 6002)

---

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில்: 06 — 11 — 1917
விண்ணில்: 28 — 08 — 1990

அமரர்
**ஜேம்ஸ் கிறிஸ்ரடாஸ் தம்பிராஜா**

அன்பினால் எம்மையாண்ட
எம் அன்புத் தெய்வமே!
ஆண்டுகள் மூன்றானாலும்
ஆறாது எம் துயர்!

அன்புடன் நினைவு கூரும்,
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உறவினர்கள்.

பிரதான வீதி,
வட்டுக்கோட்டை. (27051)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## மறுவடிவ வாசகங்கள்!

சுழிபுரம் - மாதகல் - சித்தன்கேணி பகுதிகளில் அரசாங்கப்படைகள் நேற்றுத் தொடங்கிய இராணுவ நடவடிக்கை, குடாநாட்டின் மீது இதோ நடக்கப்போகின்றது, அதோ நடக்கப்போகின்றது என்று ஆருடம் கூறப்பட்ட, பிரமாதப் படுத்தப்பட்ட பெரும் இராணுவத் தாக்குதலின் தொடக்கமாக இருக்குமோ என்று மக்களில் பலரும் சந்தேகப்பட்டனர்.

விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியாகப் பலவீனமடையச் செய்து, தீர்வு என்ற பெயரில் ஒன்றைத் திணிப்பதற்கு குடாநாட்டின் மீது ஒரு பெரும் தாக்குதலை நடத்தவேண்டும் என்பது அரசின் நெடுநாள் திட்டம். ரஞ்சன் விஜேரத்தினா காலத்திலிருந்தே அந்தத் திட்டம் அரசின் மனதில் இருந்து வருகிறது.

குடாநாட்டின் கரையோரப் பகுதிகளை இராணுவப் பிடியில் கொண்டு வந்து, விடுதலைப் புலிகளைச் சுற்றிவளைத்தால் அவர்களைச் சுருக்குப் போட்டுப்பிடித்தது போலாகிவிடும் என்று ரஞ்சன் கருதினார். ஆனால் தனது காலத்தில் அவரால் அதனைச் செய்யமுடியவில்லை!

ஆனையிறவு-பூநகரிப் பகுதியில் முன்னேறி, கிளாலிக் கடற்பாதையையும் தடை செய்தவுடன் புலிகளை போத்தல் கழுத்திற்குள் கொண்டுவந்துவிட்டதாக இராணுவ வட்டாரங்கள் கூறியதுண்டு. ஆனால் அவர்கள் நினைத்ததுபோல விடுதலைப் புலிகளை பலவீனப்படுத்துவதோ அல்லது குடாநாட்டைத் தமது பிடிக்குள் கொண்டு வருவதோ இலகுவானதல்ல என்பதனை அவர்கள் புரிந்துகொண்டார்கள்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இராணுவ ரீதியில் மிகவும் பலமுள்ளவர்களாக இருக்கிறார்கள் என்பதை கொழும்பின் பாதுகாப்புப் பகுப்பாய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அரசாங்கம் பெரும் பணச்செலவில் படைகளைப் பெருப்பித்தும், ஆயுதங்களைக் கொள்வனவு செய்தும் போரில் வெல்ல முடியாது என்பதனை தெற்கில் பலரும் உணர்ந்திருக்கிறார்கள். ஆனால் அதனைக் கருத்திற்கொண்டு அரசியல் தீர்வு வழியை நாடும் சிந்தனை இன்னும் அரசுக்கு உதிக்கவில்லை.

ஆகப்பிந்தி மண்கிண்டிமலையில் நடத்திய வியத்தகு சாதனை மூலம் விடுதலைப் புலிகள் தாம் தரைப்படைத் தாக்குதலில் அபார திறமைசாலிகள் என்பதனைக் காட்டினார்கள். வியாழக்கிழமை கிளாலிக் கடலில் இரண்டு நவீன கடற்படைப் படகுகளை தகர்த்ததின் மூலம் கடற்சமரிலும் குறைந்தவர்கள் அல்லர் என்பதனை நிரூபித்துவிட்டார்கள். வான்படைத் தாக்குதலை எதிர்கொள்வதில் தான் அவர்கள் தமது பலத்தை இனிமேல் காண்பிக்க வேண்டியுள்ளது.

நேற்று ஆரம்பமான தாக்குதல் மண்கிண்டிமலை, கிளாலித் தோல்விகளை ஈடுசெய்வதற்கானதே என்று எவரும் ஊகிக்கலாம். அந்த ஊகமே உண்மை என்பது கொழும்பில் இராணுவ வட்டாரங்கள் வெளிநாட்டுச் செய்தி முகவர்களுக்குத் தெரிவித்த தகவல் மூலம் உறுதிப்படுத்தப்படுகிறது.

இரண்டு தோல்விகளையும் ஈடுசெய்யும் விதத்தில் குடாநாட்டின் பெரும் பகுதியை அரச படைகள் கைப்பற்றிவிட்டதாகக் கூறி தென்னிலங்கையரைச் சாந்தப்படுத்தும் முயற்சி— வழமையான தந்திரம்— இது.

யாழ்ப்பாணக் குடாநாட்டைக் கைப்பற்றுவது; புலிகளைப் பலவீனப்படுத்துவது; என்பன தமிழர்களைப் பெரும் எண்ணிக்கையில் இன அழிப்புச் செய்வது என்பதன் மறுவடிவ வாசகங்களே. அத்தகைய ஒரு செயற்பாட்டில் அரசு ஈடுபடுமானால் தமிழர்களின் இலட்சியமான தனியரசு இலகுவில் எய்தப்படும். இதனை ஸ்ரீலங்கா அரசு உணர்கிறதோ இல்லையோ அதற்கான பயனை அதுவே அனுபவிக்க நேரிடும்.

## ஆலயங்களில்

கைதடி மேற்கு இணுங்கித் தோட்டம் அருள்மிகு கந்தசுவாமி கோவில் வருடாந்த மகோற்சவத்தை ஒட்டி நடைபெற்று வரும் தெய்வீகப் பேருரைத் தொடரில், "துயர் துடைக்கும் தொண்டர் குழாம்" என்னும் பொருளில் இன்று இரவு 7 மணிமுதல் 8 மணிவரை மூத்த சமய விரிவுரையாளர் பிரம்மஸ்ரீ சபாரத்தின ஈஸ்வரசர்மா உரை நிகழ்த்துவார்.

நாளை ஞாயிற்றுக்கிழமை அதே நேரத்தில், "செந்தமிழால் பசர் ஆர்வம்" என்னும் பொருளில் அவர் உரை நிகழ்த்துவார். (அ)

o o o

சுன்னாகம் கந்தரோடை மடத்தடி அருள்மிகு ஸ்ரீ நாகபுவனேஸ்வரி அம்பாள் ஆலய அலங்கார உற்சவம் நாளை ஞாயிறு காலை 10 மணிக்கு ஆரம்பமாகின்றது. அடுத்த மாதம் 8ஆம் திகதி திருஉலா பவனியும் மறுநாள் வீதிவலம் வருதலும் இடம்பெறும்.

o o o

கோண்டாவில் சித்தி வைரவர் அம்பாள் ஆலயத்தின் தேர்த்திருவிழா நாளை ஞாயிறு காலை 8 மணிக்கு நடைபெறும். (த-17)

o o o

துன்னாலை வடக்கு அருள்மிகு ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் கோவில் இரண்டாம் ஆவணி ஞாயிறு அபிஷேக உற்சவம் நாளை காலை 9.30 மணிக்கு நடைபெறும். (ஒ-173)

## கணித மூலவள கற்புல சாதன நிலையம் திறப்பு

வடமராட்சிக் கல்விக் கோட்டத்தில் அமைந்துள்ள கரணவாய் பொன்னம்பல வித்தியாலயத்தில் இன்று சனிக்கிழமை பி.ப. 3.30 மணிக்கு கணித மூலவள கற்புலசாதன நிலையம் திறந்து வைக்கப்படவிருக்கிறது.

வடமராட்சிக் கல்விக் கோட்ட அதிபர்களையும், கணித விஞ்ஞான ஆசிரியர்களையும், பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர்களையும், பாடசாலை செயலமர்வில் கலந்து கொள்ளும் மாணவர்களின் பெற்றோர்களையும், நலன் விரும்பிகளையும் இந் நிகழ்ச்சியில் கலந்து சிறப்பிக்கும்படி வடமராட்சிக் கல்விக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. வே. தி. செல்வரட்ணம் கேட்டுள்ளார். (ஒ)

## இன்று

கண்டிக்குளி வடக்கு சனசமூக நிலையப் புதுக் கட்டடத்தின் திறப்புவிழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு கண்டிக்குளி காட்டுக் கந்தோர் ஒழுங்கையில் டாக்டர் இ. தெய்வேந்திரன் தலைமையில் நடைபெறும்.

விழாவில் திரு சனா. சொக்கலிங்கத்தின் யோகப் பயிற்சி செய்முறையும் கலை நிகழ்ச்சியும் இடம் பெறும் (க)

o o o

யாழ்ப்பாணம் பல்கலைக் கழக இராமநாதன் வீதியில் அமைந்திருக்கும் சத்திய சாயி பாபா சமித்தியில் இன்றும், நாளையும் காலை தொடக்கம் மாலை வரை தொண்டுச் சேவையும் பற்றிய பயிற்சிக் கருத்தரங்கு ஒன்று நடைபெறும். [க-161)

o o o

நல்லூர் அரிமா கழகத்தின் ஆதரவில் வடமாகாண புற்றுநோய்த் தடுப்புச் சங்கத்தால் "புற்றுநோயும் தடுப்பு முறைகளும்" என்ற பொருளில் ஓர் கருத்தரங்கு கல்வியன்காடு செங்குந்தர் இந்துக் கல்லூரியில் இன்று சனிக்கிழமை மாலை 4 மணிக்கு நடைபெறும். (க)

o o o

அருட்கவி சீ. விநாசித்தம்பிப் புலவர் எழுதிய "ஸ்ரீநாராயணர் கவசம்" நூல் வெளியீடு இன்று சனிக்கிழமை அளவெட்டி நாகேஸ்வரம் ஸ்ரீநாகவரத நாராயணர் தேவஸ்தானத்தில் நடைபெறும்.

o o o

இன்று காலை 9.30 மணிக்கு யாழ். புனித யாகப்பர் ஆலய மண்டபத்தில் நடைபெறும் யாழ் மாவட்ட அரச ஓய்வூதியர் சங்கத்தின் இரண்டாவது வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் ஓய்வூதியர்களின் நலன்கள் சம்பந்தப்பட்ட பிரேரணைகள் சமர்ப்பிக்கப்படும். (த-17)

o o o

யோகாசனம் பற்றிய கருத்துரையாடலும் செயல்முறைக் காட்சியும் இன்று தம்பசிட்டியிலுள்ள பேரூட் நிறுவனத்தில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலை திரு. மா. இரத்தினசோதியும் செயல் முறைக் காட்சியை பருத்தித்துறை பிரதேசசபைச் செயலாளர் திரு. ச. செல்வத்திநாதனும் நடத்துவார்கள். (ஒ-173)

## பாடசாலைகளில்

கைதடி வளர்பிறை சனசமூக நிலையமும் சர்வோதய சிரமதான இயக்கமும் இணைந்து நடத்தும் வளர்பிறை சர்வோதய பாலர் பாடசாலையின் வருடாந்த விளையாட்டுப் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 1 மணியளவில் வளர்பிறை சனசமூக நிலைய விளையாட்டு அரங்கில் நடைபெறும். பிரதம விருந்தினராக கோப்பாய் பிரதேச செயலர் திரு இ. இளங்கோவன் கலந்து கொள்வார்.

o o o

அல்வாய் கிழக்கு பாரதி சனசமூக நிலையமும் தேசிய சர்வோதய சிரமதான இயக்கமும் இணைந்து நடத்தும் பாரதி பாலர் பாடசாலையின் வருடாந்த இல்லவிளையாட்டுப்போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் பாரதி சனசமூக நிலைய மைதானத்தில் நடைபெறும். பிரதம விருந்தினராக கரவெட்டி பிரதேச செயலாளர் திரு. [illegible] கலந்து கொள்வார். [illegible]

## அறிஞர்பெருஞ்சித்திரனாரை பிணையில் விட உத்தரவு

'தடா' சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டிருக்கும் தமிழறிஞர் பெருஞ்சித்திரனார், உடல் நலம் பாதிக்கப்பட்டிருப்பதால் அவரைப் பிணையில் விடும்படி சென்னை விசேட நீதிமன்றம் கடந்த வியாழனன்று உத்தரவிட்டது.

இந்தியக் கடற்படையின் நடவடிக்கையால் விடுதலைப் புலிகளின் மூத்த தளபதி கிட்டு கடலில் வீரமரணமடைந்ததைத் தொடர்ந்து, விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு ஆதரவாக சென்னையில் கூட்டம் ஒன்றை நடத்த முயற்சித்தபோது பெருஞ்சித்திரனாரும் அவரது மகனும் தடா சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டனர். (உ-எ)

## கிளிநொச்சி நகரில் நேற்று அஞ்சலிக் கூட்டம்

யாழ்ப்பாணம். ஆக. 28

கிளாலியில் வீரகாவியம் படைத்த கடற்கரும்புலிகள் மற்றும் கடற்புலிகள் நினைவாக நேற்று மாலை கிளிநொச்சி மத்திய பேருந்து நிலையத்தில் அஞ்சலிக் கூட்டம் ஒன்று நடைபெற்றது.

கிளிநொச்சி கோட்ட அரசியல் பொறுப்பாளர் இலக்கியன் தலைமையில் நடந்த இந்தக் கூட்டத்தில் தமிழீழ துணை அரசியல் பொறுப்பாளர் கரிகாலன் உட்பட பலர் உரையாற்றினர்.

கிளிநொச்சி நகர் முழுவதும் கறுப்புக்கொடிகளும், தோரணங்களும் கட்டப்பட்டு எங்கும் சோகமயமாக காட்சி அளித்தது. (ஒ-3)

## நாளை

தென்மராட்சி, ஆக. 28

ஜூலை, ஆகஸ்ட் மாதங்களில் வீரச்சாவு அடைந்த தென்மராட்சி கோட்ட சாவகச்சேரி வட்டத்தைச் சேர்ந்த மாவீரர்களின் நினைவஞ்சலிக் கூட்டம் நாளை இரவு 7.00 மணிக்கு மட்டுவில் மகா வித்தியாலய அரங்கில் வட்டப் பொறுப்பாளர் தமிழன் தலைமையில் நடைபெறும்.

கூட்ட இறுதியில் தென்மராட்சி கலை, பண்பாட்டுக் கழகத்தினரின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும். (ஒ-117)

o o o

யாழ்ப்பாணம், ஆக. 28

தமிழ் சோதிடர் ஒன்றியத்தின் வாராந்த சோதிட ஆய்வரங்கு நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணிக்கு தமிழ் எழுத்தாளர் ஒன்றிய பணிமனையில் நடைபெறவுள்ளது. போக்குவரத்துச் சபையைச் சேர்ந்த திரு. வை. தியாகராசா தொழில் பாவம் என்ற தலைப்பில் ஆய்வுரை வழங்குவார். கே. சி இராமநாதர் நிகழ்ச்சிக்குத் தலைமை வகிப்பார். (ஒ)

## முதுகலைமாணிகள் மூவர்

யாழ்ப்பாணம், ஆக. 28

அடுத்த மாதம் நிகழவுள்ள யாழ் பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் மூவர் முதுகலைமாணி பட்டங்களைப் பெற உள்ளனர்.

பல்கலைக்கழகப் பரீட்சைப் பிரிவு வெளியிட்டுள்ள பெறுபேறுகளின் பிரகாரம் பின்வரும் மூவரும் முதுகலைமாணி பரீட்சையில் சித்தி எய்தியுள்ளனர்.

திரு சின்னத்துரை கணேசமூர்த்தி (புவியியல்)

திரு செல்லையா திருநாவுக்கரசு (தமிழ்)

திரு பாலசுந்தரம் சிவாஜி (பொருளியல்) (அ)

## கண்காட்சி

மயிலணி, ஆக. 28

இணுவில் தென்னிந்திய திருச்சபையின் சிறு கைத்தொழில் நிலைய கண்காட்சி இணுவில் மத்திய கல்லூரியில் இன்றும் நாளையும் நடைபெறும். (ஒ 89)

## பயிலுநர் ஆசிரியர்

யாழ்ப்பாணம், ஆக. 28

யாழ். மாவட்டத்தில பட்டதாரிப் பயிலுநர் ஆசிரியர்களாக 31 பேர் நியமனம் செய்யப்படவுள்ளனர்.

நியமனம் பெறுவதற்கு தகுதி உடையவர்களெனத் தெரிவானோரை இன்று காலை 9 மணிக்கு யாழ் கல்வி அலுவலகத்தில் சமுகமளிக்குமாறு கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (அ-3)

தெல்லிநகர் ஸ்ரீ துர்க்காதேவி உற்சவ காலச் சிறப்பம்சம்

### தெல்லியூர்த் துர்க்கா நல்லை நீ!

மெல்லியர் பெரிதும் போற்றும்
தெல்லியூர் உறையும் துர்க்கா
அல்லைநீ அனைத் துயிர்க்கும்
எல்லையில் அருளின் ஊற்றே
தொல்லைகள் வருத்தும் போது
இல்லையே உன்போல் துணை
நல்லைநீ என்றே தோத்திரம்
சொல்லியே துதிப்போம் அம்மா!

— வாசுகி சிவராமலிங்கம்.

### காடழிப்பு என்பது நாடழிவின் கட்டியம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்கு - கிழக்கு இணைப்பு;

# இரு மாகாணங்களிலும் தனித்தனியாக வாக்கெடுப்பு

கொழும்பு, ஆக. 28

வடக்கு மாகாணத்துடன் கிழக்கு மாகாணம் இணைந்திருக்க வேண்டுமா இல்லையா என்பதை தீர்மானிப்பதற்காக இரு மாகாணங்களிலும் தனித்தனியாக சர்வஜன வாக்கெடுப்புக்களை நடத்தப்போவதாக அரசு அறிவித்துள்ளது.

அடுத்த ஆண்டு (1994) பெப்ரவரி 18ஆம் திகதி கிழக்கு மாகாணத்திலும் —

அடுத்த ஆண்டு ஏப்ரல் 28 ஆம் திகதி வடக்கு மாகாணத்திலும் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இரு மாகாணங்களிலும் சர்வஜன வாக்கெடுப்பை நடத்துவதற்கான தினமாக கடந்த 23ஆம் திகதியை அரசு முன்னர் அறிவித்திருந்தது.

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் கீழான ஏற்பாட்டின் பிரகாரம் தற்காலிகமாக ஏற்படுத்தப்பட்ட வடக்கு-கிழக்கு இணைப்பு தொடர வேண்டுமா இல்லையா என்பதை தீர்மானிப்பதற்காக வடக்கு மாகாணத்திலும் சர்வஜன வாக்கெடுப்பை நடத்தப்போவதாக அரசு அறிவித்திருப்பது இதுவே முதல் தடவையாகும்.

(த-5)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி தங்கரத்தினம் சிந்தாமணி

ஊரிக்காடு முக்கராவத்தையில் வசித்து வந்த திருமதி தங்கரத்தினம் சிந்தாமணி நேற்று சிவபதமடைந்து விட்டார்.

இவர் சிந்தாமணியின் அன்புத் துணைவியும் காலஞ்சென்ற கிட்டிணசாமி - இராசம்மாவின் மூத்த புதல்வியும், சின்னத்தம்பி - பார்வதி தம்பதிகளின் மூத்த மருமகளும், பாலாமணி (மணி மோட்டோ கராஜ் உரிமையாளர்), தவமணி, சாந்தினி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், விஸ்வலிங்கம் (ஓய்வுபெற்ற இயந்திர வேலை மேற்பார்வையாளர்), விவேகானந்தம் (லண்டன்), அருந்தவராசா (கனடா) ஆகியோரின் மாமியாரும், நாகராசா (லண்டன்), ஜெயந்தி (லண்டன்), யுவராஜ் (ஜேர்மனி), கோமதி (ஜேர்மனி), பஞ்சலிங்கம் (ஜேர்மனி), சுமதி (ஜேர்மனி), பிரதீபன், பிரசன்னா (கனடா), முகுந்தன், வாசுகி, முகுந்தானந்தன், அபிராமி, சாரங்கா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் துஷ்யந்தன் (லண்டன்), துஷ்யந்தன் (ஜேர்மனி), பிரவின் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (28 - 8 - 93) காலை 8.00 மணிக்கு மணி மோட்டோஸ் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மயிலியதனைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
விஸ்வலிங்கம் (மருமகன்)
பாலாமணி (மகள்)

மணி மோட்டோ கராஜ்,
ஊரிக்காடு,
வல்வெட்டித்துறை,

[27095]

### பொன்னுத்துரை - குணபாலசிங்கம்

கருகிலைப் பிறப்பிடமாகக் கொண்ட பொன்னுத்துரை குணபாலசிங்கம் (குணபாலன்) 24-08-93 இத்தாலியில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற பொன்னுத்துரை, பூரணம், ஆகியோரின் அன்பு மகனும், மலர்மகளின் அன்புக் கணவரும், சர்மினா, காலஞ்சென்ற சுதர்சன், ரவிவர்மன், சுஜித்தன் ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும் முருகையாவின் வளர்ப்புத் தந்தையும், காலஞ்சென்ற யோகலிங்கம், தவபாலசிங்கம், (மேற்கு ஜேர்மனி) தட்சாயினி (செல்வி—பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் வண்ணாம்புலம் காலஞ்சென்ற மயில்வாகனம், அன்னம்மா ஆகியோரின் அன்பு மருமகனும் இளமுருகனார், மீனலோசனி, ஞானகலை ஆகியோரின் மைத்துனரும் கணேசபிள்ளை, இராசலிங்கம், நாகேஸ்வரி ஆகியோரின் சகலனும் நளினி, மணிவண்ணன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இத்தாலியில் நடைபெறும்.

இன்று 94, 3ஆம் குறுக்குத்தெருவில் உள்ள இல்லத்தில் துக்கம் அனுஷ்டிக்கப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
திருமதி மலர்மகள் குணபாலசிங்கம்
(மனைவி)

94, 3ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

(27098)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 392/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 28-08-1993 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

### மாதகலில்....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

னர் முன்னேற முயன்றனர்.

பண்டத்தரிப்பு - சில்லாலை வழியாகவும், பொன்னாலைப் பகுதியை நோக்கியும் இரு முனைகளில் முன்னேற படையினர் முயற்சித்தனர்.

சுமார் ஒரு கிலோமீற்றர் தூரம்வரை முன்னேறிய படையினருடன் நேற்று பிற்பகல் 1.30 மணி வரை கடும் சண்டை புரிந்த புலிகள், படையினரை அவர்களது பழைய நிலைகளுக்கு விரட்டியடித்தனர்.

புலிகளின் தாக்குதலில் படையினருக்கு பலத்த உயிரிழப்புக்களும், இராணுவத் தளபாட இழப்புக்களும் ஏற்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

### காயமுற்றோர்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

— இவர்கள் இருவரும் சுழிபுரம் சந்தியில் இடம்பெற்ற புக்காரா குண்டு வீச்சில் காயமுற்றனர்.

★ இராஜேந்திரஐயர் சத்தியதாசன் (வயது 43 — சித்தன்கேணி)

★ குணசேகரம் நந்தராசா (வயது 18 — இல்லாலையைச் சேர்ந்தவர்.]

— இவர்கள் இருவரும் சித்தன்கேணியில் இடம் பெற்ற பொம்மர் தாக்குதலில் காயமுற்றனர்.

★ வழக்கம்பரை அம்மன் கோயில் முன்னால் விழுந்த ஷெல்லினால் கோயிலில் அடைக்கலம் புகுந்திருந்த மகேந்திரம் மோகனராணி [வயது 10] என்ற சிறுமி காயமுற்றார்.

★ சில்லாலையில் விழுந்த ஷெல்லினால் வீதியில் ஓடிக்கொண்டிருந்த கருணாகரன் [வயது 18 — சில்லாலை] காயமடைந்தார்.

★ பண்ணாகத்தில் இடம்பெற்ற பொம்மர் குண்டு வீச்சில் வீதியில் ஓடிக்கொண்டிருந்த பொன்னம்பலம் தவச்செல்வன் (வயது 13 — பண்ணாகம்) என்ற சிறுவன் வலது காலை முழங்காலுடன் இழந்தார்.

இவர்களைத் தவிர சிறு காயங்களுக்குள்ளான மற்றும் சிலர் யாழ். ஆஸ்பத்திரி வெளிநோயாளர் பிரிவிலும், மற்றைய ஆஸ்பத்திரிகளிலும் சிகிச்சை பெற்ற பின்னர் வீடு திரும்பினர்.

### உயிரிழந்த...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தான நிலையில் யாழ். ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டார். அங்கு அவர் மரணமானார்.

★ அந்த இடத்தில் அடையாளம் தெரியாத வழிப்போக்கர் ஒருவரும் உடல் சிதறிப் பலியானார். அவரது சிதறிய உடல் துண்டங்கள் கூட்டி அள்ளி பொட்டலமாக ஒரு வேட்டியில் கட்டப்பட்டு யாழ். ஆஸ்பத்திரி பிரேத அறைக்கு எடுத்துவரப் பட்டது.

இவர் சென்ற பெண்கள் சைக்கிள் விமானத் தாக்குதலில் சேதமடைந்து சுருண்டு காணப்பட்டது.

இவரது சேர்ட் பொக்கட்டில் நல்லூர் வடக்கு, புதிய செம்மணி வீதியைச் சேர்ந்த ஒரு பெண்ணின் மீட்பு நிதிப் பத்திரமும், அச்சுவேலியைச் சேர்ந்த இளைஞர் ஒருவரின் [illegible]

# இயக்கச்சியிலும் உக்கிரச் சண்டை

யாழ்ப்பாணம், ஆக. 28

இயக்கச்சிப் பகுதியில் நிலைகொண்டிருந்த இராணுவத்தினரும் நேற்றுக் காலை 9 மணியளவில் ஷெல் தாக்குதலை நடத்தியவாறு முன்னேற முயன்றனர்.

காலை 9 மணி முதல் பிற்பகல் 8-30 மணி வரை அவர்களுடன் உக்கிரச் சண்டை புரிந்த புலிகள் இறுதியில் படையினரை அவர்களது பழைய நிலைகளுக்கு விரட்டியடித்தனர்.

இயக்கச்சியிலிருந்து படையினர் ஏவிய ஷெல்கள் பளை, புலோப்பளை, அல்லிப்பளை, புதுக்காட்டுச் சந்தி ஆகிய பகுதிகளில் விழுந்து வெடித்தன.

# புலோப்பளையில் ஷெல்! நான்கு பேர் காயம்!!

இயக்கச்சிப் பகுதியிலிருந்து படையினர் நேற்று நண்பகல் 12 மணியளவில் ஏவிய ஷெல்கள் புலோப்பளை மாதா கோவில் அருகில் விழுந்து வெடித்ததில் வீதி திருத்த வேலைக்காக டிராக்டரிலிருந்து மண் பறித்துக்கொண்டிருந்த நால்வர் காயமடைந்தனர்.

டிராக்டர் சாரதி பொன்னம்பலம் மகாலிங்கம் (வயது 43), வேலுச்சாமி ஜெயகுருநாதர் [வயது 27], செல்லத்துரை பாலேந்திரன் (வயது 20), செ. சுதா [வயது 19] ஆகியோரே காயமுற்றனர். இவர்கள் நால்வரும் இந்திராபுரம், முகமாலையைச் சேர்ந்தவர்கள்.

இவர்களில் சுதாவைத் தவிர ஏனையோர் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

# தென்மராட்சி பகுதியிலும் அகோர குண்டு வீச்சுக்கள்

தென்மராட்சி, ஆக. 28

தென்மராட்சிப் பகுதியிலும் நேற்று விமானக் குண்டு வீச்சுத் தாக்குதல்கள் இடம் பெற்றன.

காலை 9 மணியளவில் பளை, வண்ணான்கேணிச் சந்திக்கு அண்மையில் இரு சியாமாச்செட்டி விமானங்கள் குண்டு வீச்சுத் தாக்குதலை நடத்தின. மூன்று குண்டுகள் வீசப்பட்டன. ஒன்று வெடிக்கவில்லை.

நேற்று முற்பகல் 11 மணியளவில் முகமாலைப்பகுதியில் இரண்டு புக்காரா விமானங்கள் ஏழு குண்டுகளை வீசின.

தும்புத் தொழிற்சாலை ஒன்றை இலக்கு வைத்தே இத்தாக்குதல் நடத்தப்பட்டது.

நேற்று மாலை 4.15 மணியளவில் கிளாலிப் பகுதியில் புக்காரா குண்டு வீச்சு இடம் பெற்றது. ஹெலிக்கொப்டரில் இருந்தும் தாக்குதல் நடத்தப்பட்டது.

நேற்றுப் பகல் 12 மணியளவில் சாவகச்சேரி கண்டி வீதியில் சென்று கொண்டிருந்த வாகனத்தை நோக்கி புக்காரா விமானத்திலிருந்து 50 கலிபர் தாக்குதல் நடத்தப்பட்டது.

இதற்கிடையில்—

நேற்று வெள்ளி பகல் இயக்கச்சிப் பகுதியில் பொம்மர் நடத்திய குண்டு வீச்சில் அதிர்ச்சியால் ஒருவர் மயங்கி வீழ்ந்தார்.

இயக்கச்சியைச் சேர்ந்த ப. வேலாயுதம் [வயது 46) என்பவரே அதிர்ச்சிக்குள்ளானவராவார். (உ-117-75-162)

# கடற்படைத் தளபதி வடக்கே விரைவு

கிளாலிக் கடலில் நேற்று முன்தினம் அதிகாலை கடற்படையினரின் நீருந்து விசைப் படகுகள் இரண்டை விடுதலைப் புலிகள் தகர்த்த சம்பவம் குறித்து விசாரிப்பதற்காக—

கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் மொஹான் சமரசேகர உட்பட சிரேஷ்ட படை அதிகாரிகள் பலர் வடக்கே சென்றிருப்பதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

(உ-6)

# சாவகச்சேரியில் நீதிமன்றம் இன்று திறந்து வைப்பு

யாழ்ப்பாணம், ஆக. 28

தமிழீழத்தின் இரண்டாவது நீதிமன்றம் இன்று காலை 10 மணிக்கு சாவகச்சேரியில் திறந்து வைக்கப்படும்.

தமிழீழ நீதி, நிர்வாகப் பொறுப்பாளர் திரு. பரா இத்தகவலைத் தெரிவித்தார்.

## 30 ஆம் திகதியும் விடுமுறை தினம்

கொழும்பு, ஆக. 38

முஹம்மது நபியின் பிறந்த தினத்துக்காக எதிர்வரும் 30 ஆம் திகதி திங்கட்கிழமை அரச, வங்கி, வர்த்தக விடுமுறை தினமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதாக நேற்று உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு அறிவித்தது.

மறுநாள் 31 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை போயா விடுமுறை நாளாகும்.

(ஒ-6)

## உண்ணாவிரதம்

கொழும்பு, ஆக. 28

கந்தளாய் சீனித் தொழிற்சாலையைச் சேர்ந்த 24 பணியாளர்கள் மூன்று கோரிக்கைகளை முன்வைத்து கடந்த செவ்வாய்க்கிழமை தொடக்கம் உண்ணாவிரதம் இருந்து வருகின்றனர்.

இவர்களில் இருவரின் நிலைமை மோசமடைந்துள்ளதாக அறிவிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org